6. அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகள் 23 (1) என்ற விதியின் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில் 6-வது பிரிவாக இருக்கிற "1967-ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 13/1967)" என்பதை 11-வது பிரிவாக இருக்கிற "தமிழ்நாடு, 1967-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967)" என்பதற்குப் பிறகு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) சென்னை மாநகராட்சி (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 11/1967.)

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1967-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) மசோதா* (சட்டப் பேரவை மசோதா எண் 11/1967) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழகச் சட்டம் 4/1919) 5-வது பிரிவில் வகுத்துள்ளவாறு, சென்னை மாநகராட்சி மன்றம் நூறு உறுப்பினர்களைக் கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். சென்னை மாநகர் நூறு வட்டங்களாகப் பிரிக்கப்படுவதற்கு மேற்படி சட்டத்தின் 45-வது பிரிவில் வகை செய்யப் பட்டுள்ளது. சென்னை மாநகரில் தமிழகச் சட்ட மன்றப் பேரவைக்கு உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையை ஒட்டி, சென்னை மாநகரில் உள்ளாட்சி முறைக்காக பெருவட்டங்கள் முடிவு செய்யப்பட வேண்டுமென மேற்படி சட்டத்தின் 6-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. 1967-ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் சென்னை மாநகரில் சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகள் 10 மட்டுமே இருந்தன. எனவே மாநகராட்சியிலும், 10 பெருவட்டங்களும், ஒவ்வொரு பெருவட்டத்திலும் 10 வட்டங்களாக, 100 வட்டங்களும் இருந்தன. தொகுதி எல்லை மாற்ற ஆணைக் குழு தொகுதிகளை மாற்றியமைத்ததன் விளைவாக, சென்னை மாநகரில் தமிழகச் சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கை இப்போது 10-லிருந்து 12-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, மாநக ராட்சியில் 12 பெரு வட்டங்களும், 100 வட்டங்களும் இருக்கும். பெருவட் டங்களின் எண்ணிக்கை 10-லிருந்து 12-ஆக உயர்வதால், முன்னர் இருந்ததுபோல, சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒரு சீராக 10 வட்டங்கள் இனியும் இருக்காது. இந்த எண்ணிக்கையை ஒரு சீராக அமைக்கும்பொருட்டு, வட்டங்களின் எண்ணிக்கையை 100 லிருந்து 120 ஆக உயர்த்த எண்ணியுள்ளது.

இதற்காக மேற்படி சட்டத்தின் 45-வது பிரிவிற்குத் திருத்தம் தேவை யென்று கருதப்படுகிறது. அப்போதுதான் முன்னர் இருந்ததுபோலவே ஒவ்வொரு பெரு வட்டத்திலும் 10 வட்டங்கள் இருக்கும். மேலும், வட்டங்களின் எண்ணிக்கை 100-லிருந்து, 120-ஆக உயர்த்தப்படுவதன் விளைவாக, ஒவ்வொரு வட்டத்திலும் வாக்காளர்களின் எண்ணிக்கையை ஒரு சீராக்கவும் எண்ணியுள்ளது. சென்னை மாநகரில் இப்போதுள்ள வட்ட எல்லைகளை மாற்றியமைப்பதன் வாயிலாக இதை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது. மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவில் மாநகராட்சி

---

* 1967 ஜூலை 10-ம் தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளி யிடப்பட்டுள்ளது.